# ஆணவம் தலைக்கேறிப் பேசினால் அடக்கத்தை மக்கள் சொல்லித் தருவார்கள்!

சட்டமன்ற அவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைப் பார்த்து "உங்க அப்பாவை தேடுகிறேன்" என்று முதலமைச்சர் விஜய் நக்கலடித்திருப்பது அரசியல் நாகரிகத்தையும், அவை மரபையும் குழி தோண்டிப் புதைக்கும் செயல். தமிழ்நாட்டு மக்கள் இதை வன்மையாக கண்டிக்கின்றனர்.

**"உங்க அப்பாவை தேடுகிறேன்" - யாரை பார்த்து?**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்களை பார்த்து "உங்க அப்பாவை தேடுகிறேன்" என்று சொன்னீர்களே, உதயநிதியின் அப்பா மு.க.ஸ்டாலின்.

தேட வேண்டாம், தமிழ்நாடே பார்த்துக்கொண்டிருக்கிறது!

தலைவர் மு.க.ஸ்டாலின் 2021-2026 வரை தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர். அவர் எங்கும் ஓடி ஒளியவில்லை. மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும், ஒவ்வொரு திட்டத்திலும் வாழ்கிறார்.

மகளிர் உரிமைத் தொகை கேட்டால் ஸ்டாலின் தெரிவார்.

காலை உணவுத் திட்டம் கேட்டால் ஸ்டாலின் தெரிவார்.

நான் முதல்வன் கேட்டால் ஸ்டாலின் தெரிவார்.

புதுமைப்பெண் கேட்டால் ஸ்டாலின் தெரிவார்.

மெட்ரோ, தொழில் முதலீடு கேட்டால் ஸ்டாலின் தெரிவார்.

கலைஞர் கைவினை திட்டத்தில் தெரிவார்,

கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் தெரிவார்,

அண்ணல் அம்பேத்கர் உயர்கல்வித் திட்டத்தில் தெரிவார்.

நீங்கள் தேட வேண்டியது தளபதி ஸ்டாலினை அல்ல. உங்கள் ஆட்சியின் 100 நாள் வாக்குறுதிகளை!

நீட் ஒழிப்பு எங்கே?

பெட்ரோல் விலை குறைப்பு எங்கே?

மின்வெட்டு இல்லாத தமிழ்நாடு எங்கே?

ஊழல் இல்லாத ஆட்சி எங்கே?

தாய்மாமன் சீர் எங்கே?

மகளிர் இலவச பேருந்து எங்கே?

அரசுப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு 15000 உதவித்தொகை எங்கே?

முதியோர் உதவித்தொகை 3000 எங்கே?

**தந்தையை வைத்து அரசியல்**

அரசியலில் கருத்தை கருத்தால் எதிர்கொள்ளுங்கள். தந்தையை இழுத்து சினிமா வசனம் பேசுவது கோழைத்தனம்.

தளபதி மு.க.ஸ்டாலின் மிசா சிறை சென்றவர், அடக்குமுறையை எதிர்த்து நின்றவர், உள்ளாட்சி முதல் முதலமைச்சர் வரை படிப்படியாக உயர்ந்தவர். அவரது அரசியல் பயணம் 50 ஆண்டு தியாகம்.

உங்க அப்பா யார்?

சினிமா தயாரிப்பாளரா? ரசிகர் மன்ற தலைவரா? அரசியலுக்கு வந்த 3 மாசத்துல அடுத்தவர் அப்பனை தேடுறீங்களே, உங்க அரசியல் அப்பன் யாரு?

**50 ஆண்டு ஆட்சி அவதூறு**

"50 ஆண்டு ஆட்சி நிதி நெருக்கடி தந்தது" என்கிறீர்கள். கலைஞர் + ஸ்டாலின் ஆட்சி தமிழ்நாட்டின் பொற்காலம். ரிசர்வ் வங்கி கணக்குப்படி 2026ல் கடன்-ஜிடிபி 26%. நீங்கள் வந்து 3 மாசத்துல மின்வெட்டு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு.

**"பணத்தை சுருட்டத் தெரியாது"**

திமுக எம்.எல்.ஏக்களை பார்த்து இப்படி பேச உங்களுக்கு என்ன அருகதை? வருமான வரி ரெய்டு, பனாமா பேப்பர்ஸ் பட்டியலில் பெயர் வந்தது யாரு? 100 கோடி சம்பளம் வாங்குனது யாரு?

விஜய்க்கு 3 கேள்வி:

1. உதயநிதியின் அப்பா நாட்டிற்கு என்ன செய்திருக்கிறார் என்பது மக்களுக்கு தெரியும். உங்க அப்பா நாட்டிற்கு என்ன செய்தார் என்று விளக்க முடியுமா?

2. தலைவர் ஸ்டாலின் 50 வருஷம் மக்கள் பணி செஞ்சார். நீங்க மக்களுக்காக என்ன செஞ்சீங்க?

3. சினிமா வசனம் வேண்டாம். ஆட்சி விஷன் சொல்லுங்க. இருக்கா?

இறுதி எச்சரிக்கை:

ஆணவம் தலைக்கேறி பேசினால், அடக்கத்தை மக்கள் சொல்லித் தருவார்கள். "கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லை" என்றவர்களின் கதி தெரியும்.

**தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்க!**
**தளபதி உதயநிதி வாழ்க!**



**சைதை சாதிக்**
தி.மு.க. செய்தித் தொடர்பாளர்

## மதுரை மாவட்டம் – சோழவந்தான் அருகே

# விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்!

## த.வெ.க. அரசை கண்டித்து கையில் தட்டு ஏந்தி விவசாயிகள் ஈடுபட்டனர்!

*மதுரை, ஜூன் 26- மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே தென்கரை கூட்டுறவு கடன்சங்கம்முன்விவசாய கடன்களை முழுவதுமாக தள்ளுபடி செய்யக் கோரி த.வெ.க.அரசைகண்டித்து கையில்தட்டு ஏந்திவிவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்*

*தமிழ்நாடு அரசு விவசாயகடன்களைதள்ளுபடி செய்ததில் பாரபட்சம் இருப்பதாக கூறி தமிழகம் முழுவதும் விவசாயிகள் த.வெ.க.அரசைகண்டித்து பல்வேறுபோராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.*

*இதன்படி மதுரை மாவட்டம்சோழவந்தான் அருகிலுள்ள தென்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் முன்அப்பகுதிவிவசாயிகள் தேர்தலின் போது அறிவித்தபடி*

*விவசாயிகளின் அனைத்து பயிர் கடன்கள் மற்றும் நகைக்கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி கையில் தட்டு ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*மேலும்கோரிக்கைவலியுறுத்தி கோஷமிட்டனர், இதனால்அப்பகுதியில்பரபரப்பு ஏற்பட்டது.*

*இதுகுறித்துவிவசாயிகள் கூறுகையில் "தமிழக அரசு அறிவித்துள்ள கடன் தள்ளுபடி சலுகைகள் அனைத்து விவசாயி களுக்கும் கிடைக்கவில்லை.எங்கள் கிராமம் முழுவதும் விவசாயத்தை சார்ந்து வாழும் பகுதியாகும்.இப்பகுதி விவசாயிகள் விவசாயபணிகளுக்காககூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர்க்கடன்மற்றும்நகைக்கடன் பெற்றுள்ளனர். ஆனால்தள்ளுபடி சலுகைகள் அனைத்து விவசாயிகளுக்கும்கிடைக்காதது வேதனையாகும். எனவே அனைத்து விவசாயிகளின் அனைத்து கடன்களையும்தமிழகஅரசுதள்ளுபடி செய்ய வேண்டுகிறோம், எங்கள் கோரிக்கை நிறைவேற்றா விட்டால் அடுத்த கட்டமாக தாலுகா அலுவலகம் மற்றும்கலெக்டர்அலுவலகத்திலும் போராட்டம் நடத்துவோம்" என்றனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. துரைசண்முகம்
### ஜூன் 26 (2014)



**இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழக உறுப்பினரானார்.**

**அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட பிரதிநிதியாகவும், திருவான்மியூர் வட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழக நிர்வாகத்தில் திருவான்மியூர் சென்னை மாநகர் மாவட்டத்திற்கு வந்தபோது பொதுக்குழு உறுப்பினராகவும், வேளச்சேரி பகுதிக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரும் பால்வாடி பள்ளி தலைமை ஆசிரியரும் ஒன்றா?

"தமிழக வெற்றிக் கழகத்தின் புதிய அமைச்சரவை தடுமாறுகிறதே. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதுவும் தெரியவில்லையே" என்று செய்தியாளர்கள் ப.சிதம்பரத்திடம் கேட்கும் போது "1967-ல் தி.மு.க.வும் அப்படித்தான் புதியவர்களுடன் சிரமப்பட்டது" என்று மேதாவியாக பதில் சொல்கிறார்.

த.வெ.க. வில் கே.ஏ. செங்கோட்டையன், ஜே.சி.டி. பிரபாகரன் தவிர மற்றவர்கள் சட்டசபை பார்வையாளர் மாடம் கூட செல்லாதவர்கள்.

ஆனால் அண்ணா சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 1952-ல் 15 பேரும். 1957-ல் 50 பேருமாக 64 நபர்கள் பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் திமுகவில் இருந்தனர்.

1967-ல் அமைச்சர்கள் அனைவரும் பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் தான். மொழிப் போராட்டத்தில் பலமுறை. ஆண்டுக் கணக்கில் சிறை சென்றவர்கள். சட்டமன்றத்தில் காங்கிரஸ் அமைச்சர்களை கேள்வி கேட்டு மடக்கியவர்கள்.

தி.மு.சு.வும்.த.வெ.க.வும் ஒன்றுதான் என்பது. உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரும் பால்வாடி தலைமை ஆசிரியரும் ஒன்றுதான் என்பது போல உள்ளது.

அதேபோல் "பா.ஜ.க .தாமரை ஆபரேஷன் என்கிற பெயரில் தேர்தலை சந்திக்காமல் சேர்த்தது. ஆனால் த.வெ.க.வில் மக்களை சந்தித்துவிட்டு வரச் சொல்லி ராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் மக்களை சந்தித்தது தானே சேர்கிறார்கள்" என்கிறார் ப. சிதம்பரம்.

ப. சிதம்பரம் அவர்களே, த.வெ.க.வில் சேர்ந்த அ.ம.மு.க. உறுப்பினர் காமராஜை, த.வெ.க. ராஜினாமா செய்யச் சொன்னதா? இல்லையே! அவர் வாக்கை வாங்கலாமா? மெஜாரிட்டி இல்லாததால் ராஜினாமா செய்கிறார்கள்.

சி.வி. சண்முகம் கூட்டணி ராஜினாமா செய்து தேர்தலை சந்திக்காதபோது மெஜாரிட்டி இல்லாதவர்கள் அலுவலகத்திற்கு ஏன் ஜோசப் விஜய் சென்று வாழ்த்து சொன்னது ஏன்?

கர்நாடகத்தில் 2018 தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு மெஜாரிட்டி இல்லாதபோது. இதேபோல் தான் காங்கிரஸாரை ராஜினாமா செய்து தேர்தலை சந்தித்து தான் வென்ற பின் சேர்த்துக் கொண்டார்கள். பாரதிய ஜனதாவுக்கும், தமிழக வெற்றிக் கழகத்திற்கும் வித்தியாசம் இல்லை. ஆக ஆபரேஷன் தாமரை பா.ஜ.க. எப்படியோ, அப்படித்தான் த.வெ.க. தமிழ்நாட்டில். அந்த பா.ஜ.க.வின் நிழலைத்தான் காங்கிரஸ் பூச்சூடி மகிழ்கிறது.

இந்தியாவில்ஆடும்காங்கிரஸ்அடையாளமாய் உங்கள் சிஷ்யன் விஸ்வநாதன், தமிழகத்தில் பொதுத் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற ஒரே தலித் என்ற பெருமையை பெற்ற விஸ்வநாதன், பள்ளியில் குத்து பாட்டுக்கு டான்ஸ் ஆடினாரே, ராஜினாமா செய்ய சொல்லி காங்கிரஸ் சொல்ல வேண்டும், குறைந்தபட்சம் மன்னிப்பு கூட கேட்கவில்லை.


காங்கிரஸ் மட்டுமா தமிழக வெற்றிக் கழகம் பக்கம் சென்றது? விடுதலை சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட், முஸ்லிம்லீக்கும்தானே சென்றது என்கிறார் ப.சிதம்பரம், மறுப்பதற்கு இல்லை. தி.மு.க. தலைவர் தளபதியே, ஏன் த.வெ.க. வை அழைக்காமல் கவர்னர் சதி செய்கிறார் என்றார். மறுப்பதற்கு இல்லை.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூட, "நாங்கள் த.வெ.க.விற்கு ஆதரவு தரப் போகிறோம் என்று தி.மு.க. தலைவரிடம் சொன்னபோது, அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார் தளபதி என்று எதிர்பார்த்தேன். நெகிழ்வோடு போய் வாருங்கள் என்று தளபதி சொன்னதை கேட்டு நான் வியந்து போனேன்" என்றார்.

த.வெ.க.விற்கு நீங்கள் (காங்கிரஸ்) ஆதரவு கொடுத்தது பிரச்சனை இல்லை. தி.மு.க. தலைவரிடம் நீங்கள் சொல்லாமல் போனது கூட தவறில்லை. ஆனால் உழைத்த கைவலி முடியும் முன்னே "நன்றி" கூட சொல்லாமல் போனது ஏன் என்பது தான் கேள்வி.

ப. சிதம்பரம் போன்ற மூத்த காங்கிரஸ் தலைவர்கள். தி.மு.க.விற்கு நன்றி கூறிவிட்டு, மன்னிப்பு கோரி விட்டு அரசியல் செய்திடுங்கள். உங்கள் இமேஜை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

பணம் அதிகமாக இருக்கிறது என்பதற்காக கழுத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது. பையில்தான் வைக்க வேண்டும். என்னதான் தேசிய பாட்டு என்றாலும் ஒரு நிகழ்ச்சி ஆரம்பமா - முடிவா என்பதை புரிந்து கொள்ள முதலில் "தமிழ்த்தாய் வாழ்த்தும்" முடிவில் "தேசிய வாழ்த்தும்" இதுவரை கடைப்பிடிக்கப்பட்டது. இரண்டு முறை தேசிய கீதம் பாடம் வேண்டும் என்பது தமிழ்நாடு பண்பாடு இல்லை. வழக்கம் இல்லை.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

இதுதான் காங்கிரஸ் ஆட்சியிலும் கடைபிடிக்கப் பட்ட மரபு. இப்போது த.வெ.க. ஆட்சியில் தூக்கி எறியப்பட்டது. அதை காங்கிரஸ் கட்சி கண்டிக்காதது ஏன்? ஒரு கூட்டத்தில் ஆரம்பத்தில் வரவேற்புரை, கடைசியில் நன்றியுரை என்பதுதான் வழக்கம். நன்றியுரை முதலிலும் வரும் கடைசியிலும் வரும் என்றால் எப்படி?

விஜயினை வானளவு பாராட்டி வாசிப்பதும், வரிகளை ஒரு எழுத்துகூட விடாமல், மாற்றாமல், இணைப்பு சேர்க்காமல் ஆளுநர் படிப்பதை பார்த்தால். நடப்பது த.வெ.க. ஆட்சியா அல்லது பா.ஜ.க. ஆட்சியா என தமிழ்நாட்டு மக்களுக்கு ஆச்சரியமாக உள்ளது.

திருநாவுக்கரசர். விஜய் என்ன மந்திரவாதியா என்கிறார். மந்திரவாதி அல்ல - ஜோதிடர் பின் அலைபவர்.

சின்னத்தம்பி படத்தில் பிரபு பாடும் போது திக்காமல் பாடுவார். மற்ற நேரத்தில் திக்குவார். அதைப்போல விஜய்க்கு யாரேனும் எழுதிக் கொடுத்து, ஒரு வாரம் மனப்பாடம் செய்து மேடையில் மட்டும் தான் பேசுவார். சட்டசபையில் பேசவே மாட்டார்.

கர்ஜிப்பது சிங்கத்துக்குப் பழக்கம். பிளிறுவது யானைக்கு வழக்கம். சட்டசபையில் மௌனம் காப்பது விஜய்க்கு பழக்கம். அவர் படம் ஜனநாயகன் வெளிவராததற்கும் அவர் மவுனம்தானா?

வேட்டைக்காரன் படத்தில் விஜய் கூறுவார். நான் 'சாமி முன்னாடி தான் சாந்தமா பேசுவேன். சாக்கடையின் முன் இல்லை" என்பார்.

சட்டசபை அவர் கண்ணுக்கு "சாக்கடையா" என்று அண்ணன் ப.சிதம்பரம், விஜயிடம் கேட்கவேண்டும்.




மதுரை மாவட்டம், சோழவந்தான் அருகே தென்கரை கூட்டுறவு கடன் சங்கம் முன்பாக அப்பகுதி விவசாயிகள் அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோரி கையில் தட்டு ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.